## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினதும் (''பணியகம்''), பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (குழுமம்) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பணியகத்தினதும் குழுமத்தினதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் மற்றும் குழுமம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகம் மற்றும் குழுமத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகம் மற்றும் குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகம் மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் மற்றும் குழுமம் அவற்றின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகம் மற்றும் குழுமத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகம் மற்றும் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகம் மற்றும் குழுமத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகம் மற்றும் குழுமத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் மற்றும் குழுமம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் மற்றும் குழுமம் அவற்றின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததனவா என்பதும், மற்றும்

- பணியகம் மற்றும் குழுமத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காதுள்ள நியமத்துக்கான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் 07 - நிதிக் கருவிகள்: வெளிப்படுத்துதல் என்பதன் 14 ஆம் பந்தி மற்றும் எல்கேஏஎஸ் 39 – நிதிக் கருவிகள்: அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதல் என்பதன் 37(அ) பந்தி** - பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின் படி, வங்கி உத்தரவாதங் களுக்கு எதிராக பிணையாக வைக்கப்பட்டு ள்ள நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 460 மில்லியனாக இருந்ததுடன், பணியகம் சமர்ப்பித்திருந்த பட்டோலையின் படி, அது ரூபா 398.19 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இதனால் இந்த இரண்டு தொகைகளிற்கும் இடையே ரூபா 61.80 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.<br>மேலும், இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்ட | ரூபா 398 மில்லியனுக் குப் பதிலாக தவறுத லாக ரூபா 460 மில்லியன் வெளிப்படுத் தப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்தின் சரியான மீதிக்கான பட்டோலை சமர்ப்பிக்கப்படுகின்றது. | அறிக்கையிடல் திகதியில் பெறப் பட்டுள்ள வங்கி உத்தரவாதங்க ளிற்கு எதிராக பிணை வைக்கப் பட்டுள்ள சரியான பெறுமதியை பணியகம் வெளிப்ப டுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| நேரடி உறுதிப்படுத்தலின் படி, 2021 திசெம்பர் 31 ஆம் தேதியில் உள்ளவாறு உத்தரவாதக் கடிதமாக ரூபா 62,712,505 தொகை நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தத் தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறத்தாழ ரூபா 295,813,575 மில்லியன் கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கை காலம் **எல்கேஏஎஸ். 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்:** என்ற நியமத்தின் 51 ஆவது பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்படாதும், எல்கேஏஎஸ் 8 என்ற நியமம் மற்றும் பணியகத்தின் 3.8.6 ஆம் இலக்க கணக்கீட்டு கொள்கையின் படி மதிப்பீட்டு வழுவைத் திருத்தி நிதிக் கூற்றுக்களில் சரியான முன்கொண்டு செல்லும் பெறுமதியைக் காண்பிக்காதும் அச்சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகையால் அச்சொத்துக்களின் முன் கொண்டு செல்லும் பெறுமதி அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் நியாயப் பெறுமதியை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் உள்ளிட்ட அனைத்து சொத்துக்களினதும் பயனுள்ள வாழ்க்கைக் காலத்தையும் எஞ்சிய பெறுமதியையும் மீள் மதிப்பிடும் செயல் முறையில் நாம் ஈடுபட்டுள்ளோம். இந்தப் பணியை இந்த ஆண்டில் முடிப்பதற்கும் அதனைக் கணக்குகளில் உள்ளடக்குவதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம். | முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் பொருளாதார ஆயுட்காலத்தை மீள் மதிப்பீடு செய்வதற்கும் அதன்படி நிதிக் கூற்றுக்களில் மதிப்பீட்டுத் தவறை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) பணியகம் அதன் தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள், கட்டுமான கருவிகள் மற்றும் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள், கொள்கலன்கள், கணனிகள் போன்றவற்றிற்கான பெறுமானத்தேய்வை பணியகத்தின் ஒவ்வொரு தளமும் நடாத்திய சொத்து மெய்மையாய்வின் படி அந்த சொத்துக்களின் உண்மையான காணப்படு தன்மையை கருத்தில் கொள்ளாமல் பொதுப் பேரேடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளின் அடிப்படையில் கணிப்பிட்டுள்ளது. மேலும், பணியகத்தின் பொதுப் பேரேட்டில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் காணப்படுகின்ற தன்மையை உறுதிசெய்வதற்கு, மையப்படுத்தப்பட்ட சொத்துப் பதிவேட்டை பணியகம் பராமரித்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 635,790,612 கிரயமான அத்தகைய சொத்துகளினதும் அவற்றின் மீது மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள ரூபா 545,337,442 தொகையான திரண்ட பெறுமானத்தேய்வினதும் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | இந்த நிலையான சொத்துக்களின் பௌதீக காணப்படும் தன்மையை சரிபார்க்கும் செயல் முறை இடம்பெற்று வருவதுடன் நிலையான சொத்துப் பதிவேடுகளை ஆய்வு செய்து சரிபார்க்கப்பட்ட விவரங்களுடன் புதுப்பிக்க நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | பொதுப் பேரேட்டில் காட்டப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் பௌதீக காணப்படும் தன்மையை உறுதி செய்வதன் மூலம் தேய்மானம் கணிப்பிடப்படுதல் வேண்டும். மேலும், வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பை நடத்துவதற்கு இயலுமான வகையில் புதுப்பிக்கப்பட்டு மையப்படுத்திய நிலையான சொத்துகள் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மொத்தம் ரூபா 34,168,033 கூட்டுத் தொகையான (பணியகத்தின் பதுளை தள அலுவலகத்துடன் தொடர்புடைய) இரண்டு (02) செலவு மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காட்டப்பட்டுள்ள ரூபா 625,042,274 தொகையான வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய மீதி அந்தத் தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | தவறுதலாக வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய மீதிக்கு எதிராக வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய மீதிகள் சாட்டப்பட்டுள்ளன. இது 2022 இல் திருத்தப்படும். | செலவு மீதிகள் வரவு மீதிகளிற்கு எதிராக பதிவழிக்கப் படாது அவை கணக்குகளில் தனியாகக் காட்டப்படுதல் வேண்டும். |
| (ஆ) சமர்பிக்கப்பட்ட ஒன்றித்த நிதிக் கூற்றுக்களின் படி, 04 கணக்கு விடயங்களின் (பெறத்தக்க வேலை ஆரம்பித்தல் முற்பணம், செலுத்த வேண்டிய பிடிகாசு, வர்த்தகக் கடன்பட்டோர் மற்றும் வர்த்தகக் கடன்கொடுத்தோர்) நீக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 7,041,261,926 ஆகும். எவ்வாறாயினும், பணியகத்தால் சரியான நிலுவைகளை கண்டறிவதில் உள்ள சிரமம் காரணமாக, இந்த நீக்கப்பட்ட விடயங்கள் ரூபா 47,766,826 ஆல் 2021 ஆம் ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை கணக்காய்வில் தெரியவந்தது. | **பெறத்தக்க வேலை ஆரம்பித்தல் முற்பணம் மற்றும் வர்த்தகக் கடன்பட்டோர்:**<br>பணியகத்தின் துணைக் கம்பனிக்குச் செலுத்திய வேலை ஆரம்பித்தல் முற்பண மீதிகளும் கடன்பட்டோரும் சரியானதாகும். இருப்பினும், துணைக் கம்பனியின் நேரொத்த மீதிகளின் பதிவுகளை இனங்காண்பதிலுள்ள சிரமம் காரணமாக அந்த தொகைகளை எமக்கு நீக்க முடியாதுள்ளது.<br><br>**வர்த்தகக் கடன்கொடுத்தோர்:**<br>துணைக் கம்பனியுடனான பணியகத்தின் கடன்கொடுத்தோர் மீதி சரியானதாகும். இருப்பினும், துணைக் கம்பனியின் கடன்பட்டோர் மீதி கணக்குகளில் ரூபா 85,381,104 எனக் காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 404,624 வேறுபாடு எழுகின்றது.<br>அத்துடன், பணியகத்தின் ஊவா தளத்தின் கடன்கொடுத்தோர் மீதி தவறுதலாக ரூபா 146,488,862 இற்குப் பதிலாக ரூபா 136,219,025 எனக் கருதி நீக்கப்பட்டுள்ளது.<br>மேலும், மதியுரைப் பிரிவுக்குரிய ரூபா 3,408,103 ஆன மற்றுமோர் தொகை ரூபா 2,448,103 ஆல் குறைத்து நீக்கப்பட்டுள்ளது.<br><br>**செலுத்த வேண்டிய பிடிகாசு:**<br>தவறுதலாக பணியகத்தின் தொகைக்குப் பதிலாக நாம் துணைக் கம்பயின் மீதியை நீக்கியுள்ளோம். | துணைக் கம்பனியின் நேரொத்த மீதிகளை பரிசீலனை செய்த பின்னர் சரியான தொகைகள் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) பணியகத்தின் நிதிக் கூற்றுக்களை அதன் துணைக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது, 03 கணக்கு உருப்படிகள் தொடர்பாகக் காட்டப்பட்டுள்ள நேரொத்த செலுத்த வேண்டிய மற்றும் பெறத்தக்க மீதிகளுக்கு இடையே ரூபா 199,685,696 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br><br>மேலும், அதன் துணை கம்பனியிடமிருந்து பெறத்தக்கதாக பணியகம் அறிக்கை செய்திருந்த ரூபா 9,298,487 கடன்பட்டோர் மீதியானது துணை கம்பனியின் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் துணை கம்பனியால் பணியகத்திற்கு செலுத்த வேண்டியதாக அறிவிக்கப்பட்டிருந்த ரூபா 26,481,152 கடன்கொடுத்தோர் மீதி பணியகத்தின் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விடுபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தின் மீதிகள் சரியானவை என்பதுடன் சேவைகள் வழங்கப்பட்டமைக்கான பட்டியல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | துணைக் கம்பனியின் நேரொத்த மீதிகளை பரிசீலனை செய்த பின்னர் சரியான தொகைகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) பணியகத்தின் பொலன்னறுவைத் தளத்தினால் அதன் பெறவேண்டிய வேலை ஆரம்பித்தல் முற்பணக் கணக்கில் ரூபா 811,714 செலவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. ஆகையால், பெறவேண்டிய வேலை ஆரம்பித்தல் முற்பணக் கணக்கு அந்தத் தொகையால் குறைவாகக் கூறப்பட்டுள்ளது. | சேவை நாடுனர்களிடமிருந்து மிகையாக அறவிடப்பட்ட வேலை ஆரம்பித்தல் முற்பணம் காரணமாக வரவு மீதி ஏற்பட்டுள்ளதுடன் இது திருத்தப்படும். | செலவு மீதிகளைக் கொண்டுள்ள கணக்குகளில் வரவு மீதிகளை உள்ளடக்காது அந்த மீதிகள் தனியாகக் காட்டப்படுதல் வேண்டும். |
| (உ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 5,630.41 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் இந்த அறிக்கையின் தேதி வரையிலும் ரூபா 7.75 மில்லியன் பெறுமதிக்குரிய 09 கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்கள் மாத்திரமே கிடைத்திருந்ததன் காரணமாகவும் நீண்டகாலமாக அறவிடப்படாது இனங்காணப்படாத மற்றும் மாற்றமின்றிய கடன்பட்டோர் மீதிகள் காணப்படுகின்றமையாலும் அரசாங்க அமைச்சுக்கள் (அதாவது பணியகத்தின் பிரதான கடன்பட்டோர்) அவ்வப்போது மாற்றமடைந்ததன் காரணமாக மேற்குறிப்பிட்ட கடன்பட்டோர் மீதிகள் காணப்படுவதை மாற்றுவழியிலேனும் திருப்திப்பட முடியாமையாலும் மேற்கூறிய கடன்பட்டோர் மிதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 2,280.37 மில்லியன் தொகையான கடன்பட்டோரின் பௌதீக காணப்படு தன்மை மற்றும் சரியான தன்மை குறித்து ஒரு பாரிய நிச்சயமற்ற நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | வெளிவாரிக் கணக்காய்வாளருக்கு நேரடியாக உறுதிப்படுத்தல்களை அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டு கடன்பட்டோருக்கு ஏற்கனவே மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கடன்பட்டோரின் பௌதீக காணப்படு தன்மையையும் சரியான தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், கடன்டோர் மிதிகளின் நியாயமான சமர்ப்பித்தலை உறுதி செய்வதற்காக நிதிக் கூற்றுக்களில் ஐயக்கடனுக்காக போதியளவு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

மேலும், கடன்டோர் மிதிகளின் நியாயமான சமர்ப்பித்தலை உறுதி செய்வதற்காக நிதிக் கூற்றுக்களில் ஐயக்கடனுக்காக போதியளவு ஏற்பா டுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி | நேரொத்த பதிவேட்டின் படி | வேறுபாடு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டியவை | | | | | |
| - ஊவா தளம் | 29,413,645 | 29,412,837 | 808 | பட்டோலையில் காட்டப் பட்டுள்ள சரியான மீதியை தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் திருத்த முடிந்திருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பேரேட்டிலுள்ள மீதிகளை பட்டோகளிலுள்ள மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்வதற்கு கவனம் செலுத்த வேண்டும். |
| - கிழக்குத் தளம் | 160,463,858 | 159,849,182 | 614,676 | | |
| வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டியவை | | | | | |
| - கிழக்குத் தளம் | 159,843,863 | 159,229,385 | 614,477 | | |
| - மத்திய தளம் | 470,994,092 | 470,986,948 | 7,143 | | |
| சில்லறைக் கடன்கொடுனர் | 16,610,469 | 16,495,761 | 100,757 | | |
| **மொத்த வேறுபாடு** | | | **1,337,861** | | |

### 1.5.4 தொங்கல் கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பணியகத்தின் 15 தள அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் விபரமான பட்டோலைகள் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது 20 கணக்கு விடயங்களுடன் தொடர்புடைய ரூபா 139,079,791 மில்லியன் தொகையான இனங்காணப்படாத மீதிகள் அவதானிக்கப்பட்டன. அந்த 20 விடயங்களில் ரூபா 17,252,052 பெறுமதியுடைய 07 விடயங்கள், முன்னைய ஆண்டின் கணக்காய்வு | இந்த மீதிகள் மிக நீண்ட காலத்திற்கு முன்பிருந்து எடுத்து வரப்படுவதுடன் அவை இதுவரை கோரப்படவில்லை. ஆகையால் இவை நீண்டகால பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவையாக பேரேடுகளில் ஏற்கனவே வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதனால், இந்த மீதிகள் முகாமைத்துவச் சபையின் ஒப்புதலுடன் பதிவழிப்பு/ மீளப்பெறுதல் | இந்த தொங்கல் கணக்கு பண்புடைய மீதிகளை கணக்குப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு தாமதமின்றி பயனுள்ள நடவக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிக்கையிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்ட இனங்காணப்படாத மீதிகளாகும். | செய்யப்படும். | |

### 1.5.5 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் அவதானிப்புக்கள் காரணமாக துணைக் கம்பனியின் (சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடட்) நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் **(எல்.கே.ஏ.எஸ்.) 1 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** என்பதன் 32 ஆம் பந்திக்கு முரணாக முறையே ரூபா 183.04 மில்லியன் மற்றும் ரூபா 38.04 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்பட்டோர் செலவு மீதிகள் மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பணங்களின் வரவு மீதிகள் 36 சந்தர்ப்பங்களில் அவ்வாறான கணக்கு களின் வரவு மீதிகளிற்கும் செலவு மீதிகளிற்கும் எதிரீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக் களும் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டி ருந்தன. | வாடிக்கையாளரிடமிருந்து கிடை த்த காசு கடன்பட்டோர் பொழிப் பில் செலவு மீதியாக பதவியப்பட் டிருந்தமை மற்றும் வாடிக்கையா ளரின் மேலதிக கொடுப்பனவு காரணமாக கடன்பட்டோரில் செலவு மீதிகள் தோன்றியிருந்தன. வேலை ஆரம்பித்தல் முற்ப ணக் கணக்கிலுள்ள வரவு மீதிகள் பட்டியல்களிலிருந்து முற்பணங் களை மிகையாக அறவிட்டிருந் தமை மற்றும் வேலை ஆரம்பித் தல் முற்பணங்களின் தவறான அறவிடுதல்கள் காரணமாக ஏற்பட் டிருந்தது. அவை திருத்தப்படும். | முறையே செலவு மீதிகள் மற்றும் வரவு மீதிகள் தொடர்பில் உரிய கணக்கீட்டுப் பரிகாரங்களை மேற் கொண்டு கடன்பட் டோர் மீதிகள் மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பண மீதிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,553.87 மில்லியன் பெறுமதியான வியாபார கடன்பட்டோரிடமிருந்து உறுதிப் படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரை எவ்வித உறுதிப்படுத்தலும் கிடைத்திருக்கவில்லை. மேலும், கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு ஏற்த்தாழ ரூபா 1,200 மில்லியன் பெறுமதிக்கு மாத்திரமே சான்றுறுதிப்படு த்திய பட்டியல்கள் காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், ரூபா 550 மில்லியன் கடன்பட்டோர் மீதிகளிற்காக எவ்வித பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை என்பதாக கம்பனியின் அநுராதபுரம் தள அலுவலகத்தின் பிரதான செயற்பாட்டுப் பொறியியலாளர் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், இத்தொகையும் அறிக்கை யிடல் திகதியில் உள்ளவாறான கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இவற்றின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 3,553.87 மில்லியன் கடன்பட்டோர் மீதிகளின் காணப்படும் தன்மை மற்றும் சரியான தன்மையை கணக்காய்வில் மதிப்பீடு செய்ய முடிந்திருக்கவில்லை. | எமது வாடிக்கையாளர்களிட மிருந்து அறவிட வேண்டிய தொகையை சேகரிப்பதற்கு கம்பனி குறிப்பிடத்தக்க முயற் சியை மேற்கொள்கிறது. தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியின் வழிகாட்டுதலின்படி, அனைத்து தளங்களும் ஒரு சிறப்புக் குழுவை நியமிப்பதன் மூலம் நிலுவைத் தொகையை வசூலிப்பதில் ஈடுபடுகின்றன. நடப்பு ஆண்டில், எமது கடனப்பட்டோரிடமிருந்து VAT பற்றுச்சீட்டுக்கள் இல்லாமல் ரூபா 3.5 பில்லியனுக்கும் அதிகமாக கடன் அறவீட்டை கம்பனி பெற்றுள்ளது. இந்த நிலையில் அனுராதபுர தளம் 26 நடைபெற்றுவரும் செயற்திட்டங்களை கொண்டி ருந்தது. அதில் நாம் 15 செயற் திட்டங்களை முடித்து ஒப்படைத்துள்ளோம். ஏனைய 11 செயற்திட்டப்பணிகள் இடம் பெற்று வருவதுடன், அவை மறுசீரமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய முடிக்கப்படும். கம்பனியால் மேற்கொண்டு விசாரணைகள் நடத்தப்படுகின்றன. | இனிமேலும் தாமதமிதி க்காது நிலுவையிலு ள்ள மீதிகளை அறவி டுவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்க ப்பட வேண்டுமென்பது டன் எதிர்கால மோசடி களை குறைப்பதற்காக பயனுள்ள மற்றும் வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 2.3.6 இன் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை காலத்தை கம்பனி ஆண்டுதோறும் மீளாய்வு செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எல்கேஏஎஸ். 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்ற நியமத்தின் 51 ஆவது பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஏறத்தாழ ரூபா 429.78 மில்லியன் கிரயமான அல்லது மொத்தக் கிரயத்தில் 30 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட அவ்வாறான சொத்துக்களின் பயன்தரு பொருளியல் ஆயுட் காலம் மீளமதிப்பீடு செய்யப்பட்டு, எல்கேஏஎஸ் 8 –கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் என்ற நியமத்தின் படி நிதிக் கூற்றுக்களில் சரியான முன் கொண்டு செல்லும் பெறுமதி யைக் காண்பிக்காது கம்பனியால் அச்சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. | கணக்கீட்டு நியமத்தின் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மற்றும் அதனைத் தொடந்து வரும் அங்கீகாரத்திற்காக நாம் கிரய மாதிரியினை பிரயோகிக்கின்றோம். ஆகையால், மீள்மதிப்பீட்டு மாதிரி கம்பனியினால் பிரயோகிகப்படுவதில்லை என்பதுடன் கிரயத்திலேயே அவை பதிவு செய்யப்படு கின்றன. இருப்பினும், எல்கேஏஎஸ் 16 இன் படி 2021 திசெம்பர் 31 இள்ளவாறு முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் விபரங்களை நாம் வெளிப்படுத்தியுள்ளோம். | எல்கேஏஎஸ் 16 இன் ஏற்பாடுகளின் பிரகா ரம் அச்சொத்துக்க ளின் ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்வத ற்கும் எல்கேஏஎஸ் 8 இன் படி மதிப்பீட்டுத் தவறை திருத்துவத ற்கும் கம்பனி நடவடி க்கை எடுத்தல் வேண் டும். |
| (ஈ) குறைத்தெழுதிய ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (PPE) மற்றும் உறவுமுறைத் தரப்புக்குச் செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட தொகைகளிற்கும் நேரொத்த பட்டியல்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொகைகளிற்கும் இடையே ரூபா 20.65 மில்லியன் கூட்டுத்தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | குறித்த நிலையான சொத்துக் குறியீட்டுடன் அமைவுறாத வேறுபட்ட நிலையான சொத்து வகைப்படுத்தலுக்கு மேற்கொள்ளப்பட்ட தவறான பதிவழிப்பால் இது இடம்பெற்றுள்ளது. கடன் பெறுவனவு நாளது வரைப்படுத்தல் வேறுபாடு காரணமாக இது எழுந்துள்ளது. | அதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் திருத் துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) கம்பனியின் சரக்கிருப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 105,091,340 தொகையான ஆரம்ப முடிவுறா வேலைகள் (டபிள்யுஜபி) 2021 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட மற்றும் பட்டியலிடப்பட்ட தொகையாகக் கருதி மீளாய்வாண்டில் அகற்றப்பட்டிருந்தது. இருப்பினும், அதில் உள்ளடங்கியிரு ந்த ரூபா 24,833,281 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை முழுமையடையாமலும் பட்டியலிடப்படாதும் இருந்தமை அவதானி க்கப்பட்டமையால், நிதிக் கூற்றுக்க ளிற்கான குறிப்பு 2.6 இல் வெளிப்படுத்தியுள்ள தகவல்கள் முற்றிலும் தவறானதாகும். | சேவைநாடுனர்கள் நிலுவையிலு ள்ள பட்டியல்களிற்குப் பணம் செலுத்தாமையால் இரண்டு செயற்திட்டங்கள் (BD-444 மற்றும் BD – 531) தற்காலிக மாக இடைநிறுத்தப்பட்டன. பல கலந்துரையாடல்கள் மேற்கொள் ளப்பட்டதுடன் இது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் திருத் துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) கம்பனியின் இரண்டு தள அலுவலகங்களால் (அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை) தாய்க் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 21.97 மில்லியன் தொகைக்குரிய விபரமான பட்டோலைகள் மற்றும் ஏனைய ஆதாரப்படுத்தல் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வேறுபட்ட தளங்களிற்கு இடையில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களை மெய்மையாய்வதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரப்படுத்தல் ஆவணங்கள் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும். |
| (எ) 03 செயற்திட்ட வேலைத் தளங்கள் மற்றும் பத்தரமுல்லை (WP-1 Base) பிரதான களஞ்சியத்தில் நடத்தப்பட்ட பௌதீக சரக்கிருப்பு சரிபார்ப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய் வுப் பரிசோதனையின் போது, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11.77 மில்லியன் கையிருப்பு பற்றாக்குறையாக இருப்பதும் ரூபா 1.5 மில்லியன் கையிருப்பு அதிகமாக இருப்பதும் தெரியவந்துள்ளது. அதே வேளை ரூபா 1,042,413 கிரயமான நிலையான சொத்துக்கள் கம்பனியின் WP-1 தளத்தின் சரக்கிருப்பில் சேர்க்கப் பட்டுள்ளது. எவ்வாறாயினும், இருப்புச் சரிபார்ப்புக் குழுக்களால் தெரிவிக்கப்பட்ட ஏனைய பொருண்மையான குறைபாடுகள் உள்ளிட்ட மேற்கூறிய விடயங்கள் கம்பனியால் சரக்கிரு ப்பில் சீராக்கப்பட்டிருக் கவில்லை. மேலும், வருடாந்த சரக்கிருப்பை இனங்கண்டு அவற்றை அதற்கேற்ப சரிபார்ப்பதற்கு முடியுமான விதத்தில் கம்பனி அதன் சரக்கிருப்புக்களிற்கு சரியாக குறியீடு செய்திருக்கவில்லை என்பதுடன் அந்த குறியீடுகள் ஈஆர்பி கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவுமில்லை.<br><br>மேற்கூறியவற்றின் அடிப்படையில், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் காண் பிக்கப்பட்டுள்ள ரூபா 1,027.02 மில்லியன் தொகையான சரக்கிரு ப்பின் சரியான தன்மையை கணக்காய்வில் மதிப்பீடு செய்ய முடிந்திருக்கவில்லை. | **கையிருப்பு பற்றாக்குறை மற்றும் மேலதிகம் -** ஈஆர்பி முறைமை உரிய வேளையில் நாளதுவரைப்படுத்தப்படாமையால் இவை எழுந்துள்ளன.<br><br>**உள்ளடங்கியுள்ள நிலையான சொத்து விடயங்கள் -** கம்பனியின் ஈஆர்பி முறைமை இவற்றை கையிருப்பாக வகைப் படுத்தியுள்ளமையால் இவை இருப்புக் களாக களஞ்சிய ஈஆர்பி முகாமைத்துவ முறைமையின் ஊடாக மாற்றப்பட்டுள்ளன. | கையிருப்பு பற்றாக் குறை மற்றும் மேலதிகங்களை இழிவு மட்டத்தில் பேணுவதற்காக கையிருப்பு முகாமைத்துவம் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், ஈஆர்பி முறையில் பொருட்களை சரியாக வகைப்படுத்துவதற்கான முறைகள் உருவாக்கப்பட்ட வேண்டும். |
| (ஏ) கம்பனியினால் ரூபா 1,653,804,990 மற்றும் ரூபா 2,078,338,828 கூட்டுத்தொகைகள் முறையே அதன் தாய்க் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய வியாபார வருமதிகள் மற்றும் பிடிகாசு வருமதிகள் என இனங்காணப்பட்டிருந்த அதேவேளை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் தாய்க் கம்பனியிக்கு செலுத்த வேண்டிய வேலை ஆரம்பித்தல் | தாய்க் கம்பனியுடன் இணைந்து இனங்காணப்பட்ட மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த வேறுபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்கால கருத்து முரண்பாடுகளை தவிர்ப்பதற்காக வேறுபாடுகளை கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முற்பணமாக ரூபா 3,345,272,654 கூட்டுத்தொகை இனங்காணப்பட்டிருந்தது. இருப்பினும், தாய்க் கம்பனியினால் அதன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இந்த நேரொத்த தொகைகள் முறையே ரூபா 1,643,727,470 ரூபா 2,010,467,225 மற்றும் ரூபா 3,320,415,563 எனக் காணப்பிக்கப் பட்டிருந்தது. ஆகையால், மேற்குறிப்பிட்ட 03 மீதிகளிற்கும் இடையே முறையே ரூபா 10,077,520 ரூபா 67,872,603 மற்றும் ரூபா 24,857,091 வேறுபாடுகள் அவதானி க்கப்பட்டன. எவ்வாறாயினும், மேற்குறித்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்கா ய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தளங்களின் துணை பிரிவுகளிற்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், கம்பனியின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பட்டோலை யிலுள்ள கம்பனியிடமிருந்து பெற வேண்டிய மற்றும் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகைகளாகக் காட்டப்பட் டுள்ள முறையே ரூபா 116,860,830 மற்றும் ரூபா 2,596,405 அவ்வாறு நீக்கப்பட்டிருக்கவில்லை. | வரையறுத்த கால அவகாசமே காணப்பட்டமையால் கணக்குக ளைத் தயாரிக்கையில் உள்ளக கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கொடுக்கல் வாங்க ல்களை இனங்காண்பது சிக்க லான விடயமாக அமைந்திருந்தது. இருப்பினும், நடப்பாண்டு முதல் இதனை திருத்துவதற்கு நடவடி க்கை எடுக்கப்படும். | உள்ளகக் கொடுக் கல் வாங்கல்களை உரிய வேளையில் சரியாக இனங்கண்டு நீக்குவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) நிதி நிலைமைக் கூற்றின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பரிமாற்றத்தில் இருந்த காசு ரூபா 186,124,863 ஆனதுடன் அத்தொகை 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்ட நிலுவைக் கடன்பட்டோரை தீர்ப்பதற்காக தாய்க் கம்பனியால் (அதாவது மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம்) வழங்கப்பட்ட 06 காசோலை களை இந்தத் தொகை உள்ள டக்கியுள்ளதாக கணக்காய்விற்கு கம்பனி தெரிவித்தி ருந்தது. இருப்பினும், வழங்கப்பட்ட அந்த 06 காசோலைகளின் உண்மையான பெறுமதி ரூபா 197,852,894 ஆகும். எனவே, தாய் கம்பனியால் வழங்கப்பட்ட காசோலைகளின் பெறுமதிக்கும் கணக்கு களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கும் இடையே ரூபா 11,748,930 வேறுபாடு காணப்பட்டது. மேலும், இந்த காசோலை கள் 2021 சனவரி மாதத்திலேயே வைப்புச் செய்யப்பட்டிருந்தன.<br>இதனிடையே, மேற்குறிப்பிட்ட பரிமாற்ற த்திலுள்ள காசு மீதி தொடர்பில் விரிவான பட்டோலையில் காட்டப்பட் டுள்ள தொகைக்கும் அறிக்கையிடப்பட்ட தேதியின் படியான நிதிக்கூற்றுக்களிற்கும் இடையே மேலும் ரூபா 20,900 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பரிமாற்றத்திலுள்ள காசு மீதியின் உண்மையான பெறுமதிக்கும் கக்கில் அங்கீகரிக்கப்பட்ட பெறும திக்கும் இடையிலான வேறுபாட்டி ற்கான காரணம் சப்ரகமுவ மற்றும் கடுபெத்த ஆகிய தளங்களால் பெற்றுக்கொள்ளப் பட்ட காசோலைகளின் பெறுமதி சேர் வரி (VAT) கூறாகும். | கொடுக்கல் வாங்கல் களை பதிவு செய்வத ற்கு அனைத்து தள அலுவலகங்களும் ஒரே முறையை பின்பற்ற வேண்டுமென் பதுடன் அதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் திருத்துவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் படி மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 5,630.41 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 2,734.61 மில்லியன் மற்றும் ரூபா 1,871.93 மில்லியன் தொகைகள் முறையே 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. அதேவேளை நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்காக துணைக் கம்பனி தாபிக்கப்பட்ட பின்னரும் கூட 07 ஆண்டுகளிற்கு மேலாக நிர்மாணப் பிரிவில் (ஈபீசீ) நிலுவையாகவுள்ள ரூபா 1,621.69 மில்லியன் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு பணியகம் தவறியிருந்ததுடன் 2021 சனவரி முதல் 2022 மார்ச் வரையான காலத்தில் அதில் ரூபா 869.45 மில்லியன் தொகையை மாத்திரமே பணியகத்திற்கு அறவிட முடிந்திருந்தது. | கடினமான சூழ்நிலைகளிலும் கூட, 2021 இல் கணிசமான அளவு நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடன்பட்டோர் மீதிகளை எங்களால் சேகரிக்க முடிந்திருந்தது. நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை காரணமாக, இந்த பணி கடினமாகியுள்ளது. இருப்பினும், நீண்ட காலமாக நிலுவையிலுள்ள தொகைகளை அறவிடுவதற்கான பின்தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், வியாபாரக் கடன்பட்டோரின் நியாயமான சமர்ப்பித்தலை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களில் போதுமான அளவு ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | நிலுவையாகவுள்ள மீதிகள் தாமதமின்றி அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணித்து முடிக்கப்பட்ட அல்லது நிர்மாணம் இடைநிறுத்தப்பட்ட கட்டுமானத் திட்டங்களுக்குரிய முறையே ரூபா 324.53 மில்லியன் மற்றும் ரூபா 497.64 மில்லியன் பிடிகாசு தொகையை வசூலிக்க முறையே 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், பணியகத்தின் ஈபீசீ பிரிவினால் 2021 சனவரி 01 உள்ளவாறு பெற வேண்டியதாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 2,661.13 மில்லியன் பிடி காசுத் தொகையில் ரூபா 1,501.02 மில்லியன் தொகை அறிக்கையிடல் காலத்தின் இறுதியிலும் கூட அறவிடப்படாது எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்படுகின்றது. | இந்த நீண்டகால நிலுவைத் தொகைகளை தீர்க்குமாறு கோரிக்கை விடுத்து, நாங்கள் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான நினைவூட்டல்களை அனுப்பியுள்ளோம். ஆனால் வாடிக்கையாளரின் பதில்கள் மிகவும் நலிவான நிலையில் உள்ளன. மேலும், சில செயற்திட்டங்கள் STC ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளமையால் வீத ஒப்புதல் பெறப்படும் வரை வாடிக்கையாளர்கள் பிடிகாசை விடுவிக்கவில்லை.<br>இதற்கிடையில், நீண்ட காலமாக நிலுவையிலுள்ள பிடிகாசு மீதிகளுக்கு 44% நட்டக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | மிக நீண்டகாலத்திற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட பிடிகாசு நிலுவைகளை தாமதமின்றி அறவிடுவதற்காகு உரிய பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். அதேவேளை, இந்த நீண்டகால நிலுவைகளின் அறவிடுதலுடன் சம்பந்தப்பட்ட நிச்சயமற்ற ஆபத்தை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய (Due from Customers) மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய (Due to | தீர்க்கக் கூடிய மீதிகளை மீளாய்வு செய்த பின்னர் இந்த விடயம் 2022 இல் திருத்தப்படும். | காலப்பகுப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டு, பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் நீண்டகாலமாக நிலுவையாகக் காணப்படும் மீதிகளை தீர்ப்ப |

| | | |
|---|---|---|
| Customers) மீதிகள் முறையே ரூபா 625,042,274 மற்றும் ரூபா 1,278,670,257 ஆகும். இருப்பினும், பணியகத்தால் கையேற்கப்பட்ட செயற்திட்ட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய அல்லது வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவையெதுவும் காணப்படக் கூடாது. அதற்கு முரணாக பூர்த்தியாக்கப் பட்ட 160 செயற்திட்டங்களுடன் தொடர்புயை ரூபா 540,460,962 மற்றும் ரூபா 972,361,851 மீதிகள், அந்தக் கணக்கு மீதிகளை அகற்றுவதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது முறையே வாடிக்கையாளர்களிடமிருந்து பெற வேண்டிய மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவையாக அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. பொருத்தமான மற்றும் உரிய வேளையில் பட்டியல் தயாரிப்பதற்கான முறையோன்று காணப்படாமையே இந்த நிலைமை ஏற்படுதற்கான காரணம் என்பது கணக்காய்வில் மேலும் அவதானிக்கப்பட்டது. | | னவு செய்வதற்கும் கணக்குகளில் உரிய சீராக்கல்களை மேற் கொள்வதற்கும் தாமதிக்காது பயனுள்ள வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.4 (iii) ஆம் வழிகாட்டலின் படி, செயற்திட்ட வேலைகள் 90 சதவீத பூர்த்தி நிலையை அடையும் போது வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் முழுமையாக தீர்க்கப்படுதல் வேண்டும். எனினும், முழுமையாக பூர்த்திசெய்யப்பட்ட 19 நிர்மாண செயற் திட்டங்கள் தொடர்பில் கிடைத்திருந்த ரூபா 76.6 மில்லியன் தொகையான வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் தொடர்ந்தும் வைத்திருக்கப்பட்டுள்ளது. மேலும், 06 வேலை தொடங்கப்படாத செயற்திட்டங்கள் மற்றும் 09 இடையில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் கிடைத்திருந்த முறையே ரூபா 104.07 மில்லியன் மற்றும் ரூபா 155.59 மில்லியன் தொகைகளை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பணியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.<br><br>2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்த வேலை | - ரூபா 174.82 மில்லியன் மற்றும் ரூபா 104.07 மில்லியன் வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் முறையே 10 செயற்பாட்டிலுள்ள மற்றும் 06 தொடங்கப்படாத செயற்திட்டங்களுடன் தொடர்புடையதாகும்.<br>- ரூபா 155.59 மில்லியன் வேலை ஆரம்பித்தல் முற்பணமானது கைவிடப்பட்ட 09 செயற்திட்டங்களுடன் தொடர்புடையதாகும்.<br>- ரூபா 76.6 மில்லியன் வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் 19 பூரணப்படுத்திய செயற்திட்டங்களுடன் தொடர்புடையவை ஆகும். ஆனால் இந்தத் தொகை வாடிக்கையாளர்களால் திரும்பப் பெறப்படவில்லை.<br>பொதுவாக, செயற்திட்டங்கள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக தொடரப்படுகின்றன. மேலும், செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றத்திற்கு ஏற்பவும், | அனைத்து சாத்தியமான வேலை ஆரம்பித்தல் முற்பணங்களையும் தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கும் ஏனையவற்றை வருமானமாக கருதுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆரம்பித்தல் முற்பண மீதிகள் ரூபா 3,786.14 மில்லியன் ஆனதுடன் இந்தத் தொகையானது பல்வேறு நிர்மாணச் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காக அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களிடமிருந்து முன்னைய ஆண்டுகளில் பெறப்பட்டவையாகும். அவ்வாறு பெறப்பட்ட ரூபா 1,194.01 மில்லியன் தொகை 2022 மே 31 வரையிலும் குறித்த அரசாங்க நிறுவனங்களிற்கு மீளளிக்கப்படாது கடந்த 03 ஆண்டுகளிற்கும் மேலாக 2022 மே 31 வரையிலும் பணியகத்தால் தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்படுகின்றது. | வாடிக்கையாளர்களால் வழங்கப்பட்ட கொடுப்பனவுச் சான்றிதழ்களிற்கு அமைவாகவுமே வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் மீட்டெடுப்புச் செய்யப்படுகிறன. எனவே மேற்கூறிய கணக்காய்வு அவதானிப்பு ஏற்கத்தக்கதல்ல. | |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர்களும் பிடிகாசும் முறையே ரூபா 2,309.34 மில்லியன் மற்றும் ரூபா 2,206.28 மில்லியன் ஆகும். கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் படி ரூபா 603.14 மில்லியன் தொகையான கடன்கொடுத்தோர்களும் ரூபா 305.12 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய பிடிகாசும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளன. | 90% க்கும் அதிகமான கடன் கொடுத்தோர் மற்றும் பிடிகாசுகள் துணை கம்பனிக்கு (CESL) செலுத்த வேண்டிய தொகையினை உள்ளடக்கியுள்ளது. நேரொத்த கடன்பட்டோர் மற்றும் வருமதியான பிடிகாசுகள் அதே செயற்திட்டங்களின் வெளிப்புற வாடிக்கையாளர்களாக கருதப்பட்டுள்ளதுடன் இந்த செயற்திட்டங்கள் அனைத்தும் நீண்ட காலத்திற்கு தொடரக் கூடியவையாகும்.<br>எனவே, மேற்கூறிய கடன்கொடுத்தோர் மற்றும் பிடி காசுகள் வெளிப்புற வாடிக்கையாளர்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்ட பின்னர் மட்டுமே கடன் கொடுத்தோர் மற்றும் பிடிகாசுகள் ஆகியவற்றை தீர்க்க முடியும். | கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய பிடிகாசு என்பன உரிய காலத்தில் தீர்க்கப்பட வேண்டுமென்பதுடன், விடுவிக்க முடியுமான தொகைகளை விடுவிப்பதற்கும் ஏனையவற்றை வருமானமாக கருதுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் படி, பணியகத்தால் செலுத்த வேண்டிய வருமான வரி நிலுவை ரூபா 689,135,858 ஆகும். அதிலுள்ள ரூபா 316,937,620 மற்றும் ரூபா 510,213,118 ஆகியவை முறையே 05 ஆண்டுகளுக்கும் 03 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. இந்த நிலுவையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வியாபார பெறவேண்டியவை மற்றும் நாட்டில் நிலவுகின்ற பாதகமான சூழ்நிலைகள் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் பணியகத்தின் திரவத்தன்மை நிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.<br>பணியகத்தின் தொடர்ச்சியான திரவத்தன்மை பிரச்சனைகள் மேற்குறிப்பிட்ட வரிப் பொறுப்பை தாமதமாகத் தீர்ப்பதற்கு வழிவகுத்தது. நிதிக் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், பணியகம் 2021 ஆம் ஆண்டில் மொத்த வருமான வரிப் பொறுப்பில் ரூபா 66 மில்லியன் தொகையைத் தீர்த்துள்ளது. | பணியகம் உள்நாட்டு இறைவரிச் சட்டத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் தாமதக் கொடுப்பனவுகள் மீது மிகை அறவீடு விதிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக செலுத்த வேண்டிய வருமான வரியை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 யூலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 371 மற்றும் பணியகத்தின் நிதி அதிகாரக் கையளிப்பு ஆகியவற்றின் படி அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு பல்வேறு நோக்கங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 1,699,093 மற்றும் ரூபா 1,024,217 முற்பணங்கள் முறையே 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,356,768 தொகை அடையாளம் காணப்படாத நீண்ட கால நிலுவையாகும். அவற்றை ஐயப்பாடுடைய மீதிகளாக வகைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கும் சில நிலுவைகளை பதிவழிப்புச் செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முற்பணங்கள் வழங்கப்பட்ட நோக்கம் முடிவடைந்தவுடன் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | | | |
| ii பந்தி 9.3.1 | பணியகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் ஒன்று இருக்க வேண்டுமாயினும், அத்தகைய திட்டம் ஒன்று நடுத்தர மற்றும் உயர் மட்ட நிர்வாக பதவிகளுக்காக தயாரிக்கப்பட்டு 2022 யூலை 30 வரையிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதற்கிடையில், 2005 - 2019 காலப்பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் அவ்வப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 252 உத்தியோகத்தர்களின் ஒப்பந்தக்காலம் முடிவடைந்த பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து | எம்.எம் மட்டத்திலிருந்து எச்.எம் நிலை வரையிலான உத்தேச ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் 2022 மார்ச் மாதம் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும். | பணியகத்திடம் அனைத்து மட்டங்களிற்குமான அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் இருக்க வேண்டும். மேலும், ஒப்பந்த அடிப்படையில் அவ்வப்போது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான ஒப்புதலைப் பெற்று நிரந்தர அடிப்படையில் அவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப் படாமல், மீளாய்வாண்டு வரை 2227 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தகாலம் தொடர்ச்சியாக நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. | | |
| ii. 9.14 ஆம் பந்தி | மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வழங்குகின்ற நடைமுறை வழிகாட்டல் கையேடொன்று காணப்பட வேண்டிய போதிலும், பணியகத்தின் மனித வளத்தை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கேற்ற அவ்வாறானதோர் அங்கீகரித்த வழிகாட்டல் கையேடொன்றை பணியகம் வைத்திருக்கவில்லை. | மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை வழங்குகின்ற வழிகாட்டல் கையேடொன்று பணியகத்தின் மனிதவள மற்றும் நிர்வாகப் பரிவால் 2021 இல் தயாரிக்கப்பட்டதுடன் தற்போது அது பணியகத்தின் ஈஆர்பி முறைமையில் பதவேற்றம் செய்யப்பட்டுள்ளது. | முறையாக அங்கீகரிக்கப்பட்ட மனித வள விடயங்களிற்கான அங்கீகரித்த வழிகாட்டல் கையேடொன்று பணியகத் திடம் காணப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க மற்றும் 2020 சனவரி 03 ஆந் திகதிய 01/ 2017(1) ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைகள் | கட்டிடங்களின் கட்டப்பட்ட ஆண்டும் பெறுமதியும், ஒவ்வொரு வகையைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை, மின்சார செலவு, பயன்படுத்தப்பட்ட கட்டிடங்களின் விவரங்கள் மற்றும் வாடகைக்கு வழங்கப்பட்ட அல்லது மீள வாடகைக்கு வழங்கிய கட்டிடங்களின் விவரங்கள் போன்ற தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு 2022 யூன் 30 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தகவல்களை நாம் ஏற்கனவே அதாவது 2022.03.04 அன்று கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளோம். | சுற்றறிக்கையின் படி சுட்டிக்காட்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.8 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி மீதியான ரூபா 1,355,214 தொகை 06 வங்கி நடைமுறைக் கணக்குகளில் 1 முதல் 2 ஆண்டுகள் வரை விளைவற்றதாக வைத்திருக்கப்பட்டதுடன், இந்த வங்கிக் கணக்குகளை தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் அரையாண்டு தோறும் மீளாய்வு செய்யப்பட்டு இந்த செயலற்ற வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு அல்லது தொடர்ச்சியாக செயற்படுத்தப்படுவதன் நியாயத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முகாமைத்து | கணக்குகளை மூடுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அதன்படி அவை மூடப்படும். | செயற்பாடற்ற மற் றும் பணியகத்தால் தனியார் வங்கிகளில் பராமரித்து வரப்படுகின்ற வங்கிக் கணக்குகளை முடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

வம் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கூட கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 236,964,960 தேறிய இலாபமாகக் காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டில் ரூபா 261,360,170 தேறிய இலாபம் ஒன்று காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா 24,395,210 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிர்மாண வருமானம் மற்றும் நிதி வருமானம் என்பன குறைவடைந்திருந்தமையே நிதி விளைவுகளில் இந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குகள் மீதான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான பிரதான வருமானச் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அவற்றின் அதிகரிப்பு மற்றும் குறைவுகளின் விகிதாசாரத்துடன் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக | முரண் {சாதகம் / (பாதகம்)} | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | (%) |
| **செயற்பாட்டு வருமானம்** | | | | |
| நிர்மாணம் | 3,947.26 | 4,124.05 | (176.79) | 4 |
| மதியுரைச்சேவை | 2,116.50 | 2,007.79 | 108.71 | 5 |
| **ஏனைய வருமானம்** | | | | |
| வாடகை வருமானம் | 20.16 | 32.52 | (12.36) | 38 |
| நானாவித வருமானம் | 36.59 | 21.96 | 14.63 | 67 |
| நிதி வருமானம் | 175.84 | 263.17 | (87.33) | 33 |
| **செலவினம்** | | | | |
| பெறுமானத்தேய்வு | 154.71 | 173.62 | 18.91 | 11 |
| நிர்வாக செலவினம் | 681.48 | 656.53 | (24.95) | 4 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினம் | 29.21 | 0.47 | (28.74) | 6115 |
| நிதிக் கிரயம் | 5.03 | 4.94 | (0.09) | 2 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் ரூபா 3,223.35 மில்லியன் மற்றும் ரூபா 4,480.85 மில்லியன் பெறுமதியான முறையே நிதி வளங்கள் மற்றும் நிலையான சொத்துக்களை வினைத்திறமையாகப் பயன்படுத்தி அதன் வருவாயை அதிகரிப்பதில் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும்.

(ஆ) நிர்மாண பணிகளின் நோக்கத்திற்காக துணைக் கம்பனியை நிறுவிய பின்னரும் கூட பணியகத்தின் கீழ் தொடர்ந்தும் நிர்மாணப் பிரிவை (EPC) நட்டத்தில் (2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு நட்டங்கள் முறையே ரூபா 53.89 மில்லியன் மற்றும் ரூபா 39.57 மில்லியன்) இயக்கிச் செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து முகாமைத்துவம் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பணியகத்தின் இன் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | |
| மொத்த இலாப விகிதம் (ஜிபி) (%) | 10.88 | 8.12 | 7.64 |
| செயற்பாட்டு இலாப விகிதம் (%) | 1.09 | 0.05 | 0.39 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ)(%) | 1.26 | 1.34 | 1.73 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 1: 1.3 | 1:1.2 | 1:1.2 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 1:1.3 | 1:1.2 | 1:1.2 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

பணியகம் அதன் ரூபா 18,764,612,183 மொத்த சொத்துக்கள் தளத்தைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின்போது ரூபா 236,964,960 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றை உழைத்திருந்தது. ஆகையினால், மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் 1.26 சதவீதமாக (2020– 1.34 சதவீதம்) மாத்திரம் காணப்பட்டதுடன், இது 2012 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தேற்சியாக குறைவடைந்து வந்திருந்தது. மேலும், இதனையொத்த தொழிற்துறையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்துடன் ஒப்பிடுகையில் இது மிகவும் பின்தங்கிய மட்டத்தில் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்துடன் கைச்சாத்திட்டிருந்த பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய மற்றும் 2007 முதல் 2021 வரையிலான கால கட்டத்தில் சம்பள விடுப்பில் வெளிநாடு சென்றிருந்த 10 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,660,406 தொகையான பாடநெறிக் கட்டணத்தை வசூலிப்பத ற்கு பணியகம் முறையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியி ருந்தது. | கோரப்பட்ட கோவைகள் சட்ட நடவடிக்கைக்காக சட்டப் பிரிவுக்கு யைளிக்கப் பட்டுள்ளன. | நிலுவையில் உள்ள பாடநெறி கட்டணங்களை அறவிடுவதற் காக பணியகத்துடன் பிணை முறி உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டு அதனை மீறியிருந்த அந்த உத்தியோ கத்தர்களிற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஈபீசீ பிரிவிலுள்ள பணியகத்தின் 08 தள அலுவலகங்கள் 2021 ஆம் ஆண்டில் ரூபா 72,435,372 செயற்பாட்டு நட்டத்தை ஈட்டியிருந் ததுடன், இந்த தள அலுவலக | நாட்டின் பொருளாதார தளர்வு பணியகத்தின் செயலாற்றலை மோசமாக பாதித்திருந்ததுடன் அது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும். | பணியகத்தின் நிதி வருமானத்தை அதிக ரிப்பதைக் காட்டிலும் அதன் செயற்பாட்டு வருமானத்தை அதிக |

ங்களில் 05 தள அலுவலகங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் செயற் பாட்டு நட்டத்தை அறிவித்தருந்தன. மேலும் 03 தள அலுவலகங்கள் 2017 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டு நட்டத்தை அறிவித்தி ருந்தன. அத்துடன், பணியகத்தின் 06 மதியுரைச் சேவைப் பிரிவுகள் 2021 ஆம் ஆண்டில் ரூபா 93,140,717 செயற்பாட்டு நட்டத்தை ஈட்டியிருந்ததுடன், அவற்றில் 03 மதியுரைச் சேவை பிரிவுகள் 2017 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டு நட்டத்தை அறிவித்தருந்தன.

பணியகத்தின் மதியுரைப் பிரிவில் 20 கிரய நிலையங்கள் காணப்படுகின்றன. அவை வெவ் வேறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டுள்ளதுடன் வெவ்வேறு பணியாளர் எண்ணிக்கையையும் கொண்டுள்ளன. ஆனால் அவை அனைத்தும் பணியகத்தின் மொத்த மதியுரை வருவாய் வெளியீட்டை உருவாக்க ஒற்றுமையாக வேலை செய்கி ன்றன. எனவே அவற்றை தனி அலகுகளாகக் கருதி சில அலகுகள் குறைவாகச் செயல்ப டுவதாகக் கூறுவதை ஏற்க முடியாது.
இருப்பினும், பணியகத்தின் பௌதீக மற்றும் மனித வளங்களிலிருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பணியகத்தின் நோக் கெல்லைக்கு உட்பட்டு சாத்திய மான புதிய வணிக வாய்ப்புக் களை கண்டறிய முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ரிப்பதற்கு முகாமை த்துவம் தனது கவனத்தை செலுத்த வேண்டும்.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிர்மாண வருமான இனங்காணல் அறிக்கையின் படி, பணியகத்தின் நிர்மாணங்கள் பிரிவினால் கையேற் கப்பட்டு பூரணப்படுத்திய செயற் திட்டங்களில் 19 நிர்மாண வேலைகள் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 146,791,423 மொத்த நட்டத்தை ஈட்டியிருந்தன.

நட்டத்துக்கான காரணங்கள் பின்வருமாறு.
- ஆர். பிரேமதாச கிரிக்கெட் ஸ்டேடியம் தொடர்பாக மூன்று தனித்தனி வேலைகள் காணப்பட் டதுடன் பணியகத்தின் உள்ளகப் பிரிவுக்கு செலுத்தப்பட்ட மதியுரை கட்டணமும் இந்த வேலைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் அந்த உள்ளகக் கட்டணம் 3 வேலைக் குறியீடு களுக்கும் பொருந்தும். எனவே ஒட்டுமொத்தமாக இந்தத் செயற் திட்டத்தால் நட்டம் ஏற்படவி ல்லை.
- சில மேலதிக வேலைகள் ஒரு சில செயற்திட்டங்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.
- வாடிக்கையாளர் இன்னும் ஒப்புதல் அளிக்காததால் ஒப்பந் தத் தொகைக்கான முரண்கள் மற்றும் விலை உயர்வுகள் கருத்தில் கொள்ளப்படவில்லை.
- முன்கூட்டிய விலைப்பட்டிய லைக் காட்டிலும் குறைவான பெறுமதியையே வாடிக்கையாளர் சான்றுறுதிப்படுத்தியமையால் செயற்திட்டங்கள் நட்டமடைந்து ள்ளன.
- இறுதிக் கொடுப்பனவுச் சான்றிதழ்கள் பெறப்படாததுடன் எதிர்பாராத செலவுகளைச்

எதிர்காலத்தில் இந்த நட்டங்களைத் தவிர்ப் பதற்கு பணியகம் பயனுள்ள நடவடிக் கைகளை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | செய்ய வேண்டியிருந்தமையால் செயற்திட்டங்கள் நட்டத்தை நோக்கிச் செல்கின்றன.<br>- ஏனைய செயற்திட்டங்களின் சில செலவுகள் தவறுதலாக இந்த செயற்திட்டங்களால் ஏற்கப்பட்டது. இது சரி செய்யப்படும்.<br>- சில செயற்திட்டங்களுக்கு STC இன் ஒப்புதல் இன்னும் கிடைத்திருக்காததுடன் 90 சதவீத பணிகளிற்கே தற்போது வரை சான்றுறுதிப்படுத்தல்கள் பெறப் பட்டுள்ளன. எனவே STC அனுமதிகள் பெறப்பட்ட பின்னர் இந்த நட்டங்கள் குறைக்கப்படும். | |
| (இ) பணியகத்தால் குறுகிய கால மற்றும் நீண்டகால முதலீட்டு மூலங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,223,350,872 முதலீடுகளிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 170,809,765 வட்டி வருமானத்தை ஈட்டியிருந்ததுடன் அது மீளாய்வாண்டிற்கான ரூபா 236,964,960 வரிக்கு முந்தைய தேறிய இலாபத்தில் 72.08 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. | நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் தாக்கம் காரணமாக எமது செயற்பாட்டு இலாபம் 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக குறைவடைந்தது. மேலும், நிர்மாணத் துறையில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக, மீளாய்வாண்டில் பணியகத்தால் போதிய செயற்பாட்டு இலாபத்தை ஈட்ட முடிந்திருக்கவில்லை. மேலும், மதியுரை மற்றும் நிர்மாண செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ள ஒரு அமைப்பு என்ற வகையில், நாங்கள் வேலை ஆரம்பித்தல் முற்பணங்களை பெற்றுக் கொள்வதுடன் அவை உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படும் வரை குறுகிய கால வைப்புக்களில் வைப்புச் செய்யப்பட்டு வினைத்திறனாக பயன்படுத்தப் பட்டுள்ளன. பெரும்பாலான செயற்திட்டங்கள் பெறப்படும் போது, இந்த நிலையான வைப்புக்கள் வேலை ஆரம்பித்தல் முற்பணங்களுக்கும் செயலாற்றலுக்கும் உத்தரவாதத்தை வழங்குவதற்காக பிணை வைக்கப்படுகின்றன. | பணியக த்தின் செயற்பாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் மேலதிக நிதி வளத்தை பயன்படுத்தி பணியகத்தின் பிரதான குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கும் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) பணியகம் அதன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,191.66 மில்லியன் கிரயமுடைய நிலையான சொத்துக்களிற்கு குறியீடுகளை செய்திருக்காததுடன் அந்தக் குறியீடுகள் நிலையான சொத்துப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, அந்த சொத்துக்களின் காணப்படும் தன்மை | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படும். | பணியகத்தின் அனைத்து சொத்துக்களும் குறியீடு செய்யப்பட்டு அந்தக் குறியீடுகள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். |

சந்தேகத்திற்குரியதாக இருப்ப தால், வருடாந்த சொத்து மெய்மை யாய்வில் அந்த சொத்துக்களை இனங்காண முடியவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பணியகம் அதன் அனைத்து நிர்மாணச் செயற்திட்டங்களையும் தனது துணைக் கம்பனிக்கு உப ஒப்பந்தத்தின் கீழ் கையளித்திருந்தமையால், பணியகம் தற்போது மதியுரைச் சேவை வழங்குவதில் மாத்திரமே ஈடுபட்டுள்ளது. ஆகவே, ஏறத்தாழ 395 பொறியியலாளர்கள் உட்பட 1,094 ஊழியர்கள் மதியுரைச் சேவை வருமானத்தை மாத்திரம் ஈட்டுவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளமை கணக்காய்வில் புதிராக காணப்பட்டது. மேலும், 2012 ஆம் ஆண்டில் அதாவது துணைக் கம்பனி ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர், பணியகமானது ஒரு பொறியியலா ளருக்கும் ஊழியர் ஒருவருக்கும் (நிர்மாணம் மற்றும் மதியுரை வருமானம்) வருமானமாக முறையே ரூபா 23.58 மில்லியன் மற்றும் ரூபா 8.97 மில்லியன் தொகையை ஈட்டியிருந்தது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அதாவது துணைக்கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட பின்னர், அந்த வருமானம் முறையே ரூபா 6.29 மில்லியன் மற்றும் ரூபா 2.27 மில்லியன் தொகையையால் குறைவடைந்திருந்தது. | கீழே காட்டப்பட்டுள்ள பகுப்பாய்வின் படி, மதியு ரைச் சேவை செயற்திட்டங் களிற்கு இணைப்புச் செய்ய ப்பட்டுள்ள பொறியியலாளர் களின் வருமானம் அவ்வாறு குறைவடையவில்லை. | ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூபா 2 பில்லியன் மதியுரை வருமானத்தை மாத் திரம் ஈட்டுவதற்கு 1,094 ஊழியர்களை ஈடுபடுத்தும் வேவை குறித்து பணியகம் மீண்டும் அதன் கவ னத்தை செலுத்துதல் வேண்டும். |

| | **2012** | **2021** |
|---|---|---|
| மதியுரைச்சேவை வருமானம் - ரூ. மில். | 1,509 | 2,116 |
| பொறியியலாளர் எண்ணிக்கை | 341 | 395 |
| பொறியியலாளர் ஒருவருக்கான வருமானம் - ரூ. மில். | 4.42 | 5.35 |
| ஊழியர் ஒருவருக்கான வருமானம் - ரூ. மில். | 1.12 | 1.93 |

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (ஆ) பணியகத்தின் வளங்களை பயன்படுத்தியமைக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,431.24 மில்லியன் தொகை துணைக் கம்பனியிடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. இந்த மீதியானது அவ்வப்போது துணைக் கம்பனிக்கு வழங்கப்பட்ட வாகனங்களிற்கான வாடகைக் கட்டணங்கள், தற்காலிக கடன்கள், நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்களின் பெறுமதிகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும், இதனை அறவிடுவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்ப டாமையால் இந்த மீதி தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றிருந்தது. அத்துடன், துணைக் கம்பனியின் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 2011 ஆம் ஆண்டில் மூலதனப் பங்களிப்பாக ரூபா 10 மில்லியன் | பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலின் படி, இந்த நீண்டகாலமாக காணப்படும் கம்பனிகளிற்கு இடையிலான மீதிகளை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து அபிப்பிராயம் ஒன்றை வழங்குவதற்கு மதியுரைச் சேவை நிறுவன மொன்றுக்கு பொறுப்பழிக்கப்பட் டுள்ளது. மதியுரைஞரால் வழங்கப்பட்ட வரைவு அறிக்கை தற்போது எம்மால் பரிசீலிக்கப்பட்டு வருவதுடன், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்துவத்தால் சமரச நடைமுறை யொன்று அறிமுகப்ப டுத்தப்படுதல் வேண் டும். |

தொகை துணைக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், துணைக் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டது முதல் இது வரையிலும் இந்த முதலீடுகளிற்காக எவ்விதத் திரும்பலும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணியகம் கொழும்பு 07, சரண வீதியில் அமைந்துள்ள 15 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட உத்தியோகபூர்வ குடியிருப்பு வளாகத்தைக் கொண்டுள்ளதுடன், மேற்படி வீட்டுத் தொகுதி அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 960 மில்லியன் எனவும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 60.4 மில்லியன் எனவும் கணக்குகளில குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வு பரிசோதனை யின் போது பின்வரும் அவதானிப்புகள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| • மேற்கூறிய 15 குடியிருப்புக்களில், 03 குடியிருப்புக்கள் 2004 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 02 குடியி ருப்புக்கள் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் முன்னைய வரிசை அமைச்சின் செயலாளரின் பாவனைக்காக வழங்கப்பட்டுள் ளதுடன் அந்த தரப்பினருடன் ஏதேனும் வாடகை அல்லது குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. இதே வேளை, இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளருக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோக பூர்வ குடியிருப்புக்காக வாடகை எதுவும் சனவரி 2011 முதல் இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தின் உத்தியோகபூர்வ குடியிருப்பு இலக்கம் D7 இல் நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள திஸாநாயக்கவும், உத்தியோகபூர்வ குடியிருப்பு இலக்கம் C இல் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவும் தங்கியுள்ளனர். 2022 யூலை மாதம் வரையி லான வாடகைகள் அறவிடப் பட்டுள்ளதுடன், இருவரும் அவர்களுக்கு அனுப்பப்பட்ட வாடகை ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டு திருப்பி அனுப்பவில்லை.<br><br>உத்தியோகபூர்வ இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் செயலாளர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. அனுர திஸாநாயக்க தங்கியு ள்ளார். ஆவரால் அனைத்து வாடகைகளும் தீர்க்கப்பட்டு ள்ளன.<br><br>குடியிருப்பு A-1 இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2010 ஜனவரி வரை அனைத்து வாடகைகளும் செலுத்தப்பட்டு | அரசாங்க தலைமை மதிப்பீட்டாளரிடம் இருந்து பெறப்படும் விலை மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்ப டையில் உரிய வாட கையை நிர்ணயித்து, அந்த தரப்பினருடன் குத்தகை ஒப்பந்தங் களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ள்ளன. 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வாடகை எதுவும் பெறப்படவில்லை மற்றும் குடியிருப்பின் பராமரிப்பு மகாவலி அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுகிறது. | |
| • மேற்கண்ட குடியிருப்புகளுக்கான வாடகையை நிர்ணயம் செய்வதற்கு முனனர், தலைமை விலை மதிப்பீட்டாளரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | வாடகைகளை நிர்ணயம் செய்வதற்காக தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவின் கீழ் பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து விலை மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | தாபன விதிக் கோவையின் விதிகளின்படி செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோக பூர்வ குடியிருப்புக்கான மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்கள் 2022 மே 31 இல் உள்ளபடி முறையே ரூபா 12,056,803 மற்றும் ரூபா 1,778,722 நிலுவையில் இருப்பது தெரியவந்துள்ளது. சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர் அதனைத் செலுத்தத் தவறினால், எதிர்காலத்தில் நிலுவையில் உள்ள பட்டியல்களை செலுத்த வேண்டிய இறுதிப் பொறுப்பை பணியகம் ஏற்க வேண்டிவரும் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | சரியான நேரத்தில் பட்டியல்களை செலுத்துவது குடியிருப்பாளரின் பொறுப்பாகும். மேலும் நிலுவைத் தொகையை வசூலிப்பது சேவை வழங்குநர்களின் கடமையாகும். | நிலுவைத் தொகைக்கான இறுதிப் பொறுப்பை பணியகம் ஏற்க வேண்டிவரும் என்பதால் இதுபோன்ற இழப்புகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • இந்த உத்தியோகபூர்வ குடியிருப்பு வளாகம் அதிக பொருளாதார பெறுமதி கொண்ட கொழும்பின் மையத்தில் அமைந்திருந்த போதிலும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பணியகத்தால் ஈட்டப்பட்ட மொத்த வாடகை வருமானம் முறையே ரூபா 1,803,878 மற்றும் ரூபா 1,966,976 மட்டுமேயாகும். இந்த மொத்த வாடகை வருவாயை மொத்த சொத்து மதிப்புடன் ஒப்பிடும் போது, இது மொத்த சொத்து மதிப்பில் 0.2 சதவீதத்தை மாத்திரமே பிரதிநிதித்துவம் செய்கின்றது. எனவே, அதிக பொருளாதார மதிப்புள்ள இந்த சொத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதில் பணியகத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குடியிருப்புத் தொகுதியின் அமைவிடத்தின் உயர் பொருளாதார மதிப்பைக் கருத்தில் கொண்டு, பணியகம் ஏற்கனவே திட்டங்களைத் தயாரித்து, அந்த இடத்தில் பல மாடி கட்டிடத் தொகுதியை நிறுவுவதற்கான முன்னோடி நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளது. இருப்பினும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் தேவையான கட்டுமான அனுமதிகளைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக, செயற்திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதுடன் நிலைமை மேம்பட்டவுடன் திட்டமிட்ட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். | இந்த சொத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு பணியகம் கவனம் செலுத்த வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | | | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **செயற்திட்டத்தின் பெயர்** | **பெறுமதி ரூபா** | **கைவிடப்பட்டதற்கான காரணம்** | |
| ரூபா 2,671,554,919 பெறும தியுடைய பன்னிரண்டு (12) நிர்மாணச் செயற்திட் டங்கள் 2021 ஆம் ஆண்டில் துணை கம்பனி க்கு கையளிக்கப்பட்டிரு ந்ததுடன் அவற்றில் ரூபா 519,926,517 பெறுமதியு டைய 3 செயற்திட்டங்கள் பல்வேறு காரணங்களால் முடிக்கப்படாமல் கைவிடப் பட்டன. | 1. நகர அபிவி ருத்தி அதிகார சபையினால் கையகப்படுத் தப்பட்ட காணி யின் அபிவிரு த்திக்கான கட்டுமானம் | 111,817,502 | திட்டம் 2021 இல் தொடங்கப்பட்டது. இது UDA இன் கீழ் ஒரு திட்டமாகும், மேலும் வாடிக்கையாளரின் நிதிக் கட்டுப்பாடுகள் காரண மாக திட்டம் இடைநிறுத் தப்பட்டது | குறித்துரைத்த காலத்தில் நிர்மா ணச் செயற்திட் டங்களை முடிப்ப தற்கு உச்சபட்ச முயற்சி எடுத்தல் வேண்டும். |
| | 2. கம்பளையில் இரயில் பாதைக்கு சமாந்தரமாக புறவழிச் சாலை அமைத்தல் | 291,374,215 | திட்டம் 2021 இல் தொடங்கப்பட்டது. இது UDA இன் கீழ் ஒரு திட்டமாகும், மேலும் வாடிக்கையாளரின் நிதிக் கட்டுப்பாடுகள் காரண மாக திட்டம் இடைநிறுத் தப்பட்டது | |
| | 3. “மிஹிகத மதுர“ கட்டிடத்தின் நான்காவது மாடியின் கட்டுமானம். | 116,734,800 | திட்டம் 2021 இல் வழங்கப்பட்டதுடன் 2022 இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், வாடிக்கையாள ரின் பிரதானமாக நிதிக் கட்டுப்பாடுகள் காரண மாக திட்டத்தின் நோக் கெல்லை குறைக்கப்பட் டது. | |

## 3.6 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்ப ட்டிருந்த கொள்வனவுத் திட்டத்தின் படி, இந்த ஆண்டில் கொள்வனவு செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த விடயங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 424,519,369 ஆகும். இருப்பினும், உண்மையாக கொள்வனவு செய்யப் பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 293,264,520 மாத்திரமே ஆகும். அது மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 69.08 சதவீதத்தை மாத்திரமே பிரதிநிதித்து வம் செய்திருந்தது. எனவே, பணியக த்தின் உண்மையான தேவைகளை கருத்தில் கொள்ளாமல், கொள்வனவுத் திட்டமானது எழுந்த மாறான அடிப்ப டையில் தயாரிக்கப்பட்டு அமுல்படுத் தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாம் எதிர்காலத்தில் மிகவும் நெகிழ்வுத் தன்மை கொண்ட கொள்வனவு திட்டத்தை தயாரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். | நடவடிக்கைகளை சரி யான நேரத்தில் முடிப்ப தை உறுதி செய்வதற் கும், அதற்கான சிறந்த சந்தை பெறுமதியை பெறுவதற்கும் முழு கொள்வனவு செயல் முறையின் திறமையான திட்டமிடல் மிக முக்கியமானது. |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொது முயற்சிகளின் நல்லாளுகைக் கான வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறி க்கையின் 9.2(உ) மற்று (ஊ) பந்திகளின் படி புதிய பதவிகள் உருவாக்கப்படுகையிலும் மேலதிக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்கையிலும் பொதுத் திறைசே ரியின் பொது முயற்சிகள் திணைக்க ளத்திடமிருந்து ஒப்புதல்/ இணக்கப் பாடு பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், அதற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்புக்கு 03 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு 24 உத்தியோகத் தர்கள் மீளாய்வாண்டில் ஆட்சேர்க் கப்பட்டிருந்தனர். மேலும், அங்கீகரி க்கப்பட்ட ஊழியர் கோப்பை விஞ்சி 10 பதவிகளுக்கு 151 உத்தியோக த்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | அவ்வப்போது தேவைப்ப டுகின்ற உத்தேச செயற் திட்ட பணிகளிற்காக மாத்தி ரமே ஒப்பந்த அடிப்படை யில் பணியகம் ஆட்சேர் ப்பை மேற்கொள்கின்றது. | பணியகத்தின் அங்கீகரிக்கப் பட்ட பதவியணியினருக்கு மிகையாக வெவ்வேறு பிரிவுகளின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்கள் குறித்த தகவல்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அதன் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) பணியகத்தால் துணைக் கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கைக்கும் துணைக் கம்பனி யால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக் கப்பட்ட பட்டோலையில் காண்பிக்க ப்பட்டுள்ள அவ்வாறு விடுவிக்கப் பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக் கும் இடையே 10 ஊழியர்களது வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இருப்பினும், இந்த வேறுபாட்டி ற்காக கணக்காய்விற்கு விளக்கமளி க்கப்படவில்லை. | 2021.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்தின் பதவியணியினர் எண்ணிக்கை சரியானதாகும். | வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.8 வாகன குழாம் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரையறுத்த கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து கோரப்பட்ட காப்புறுதி இழப்பீடுகள் தொடர்பில் கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் பிரகாரம், 2021 சனவரி திசெம்பர் வரையான காலத்தின் போது 17 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகி யிருந்ததுடன் 16 வாகன விபத்துக்கள் தொடர்பில் மாத்திரமே ரூபா 1,113,793 காப்புறுதி இழப்பீடு கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், விபத்துக்குள்ளான வாகனங்கள் | 2021 ஆம் ஆண்டிற்கான வாகன விபத்துக்கள், காப்புறுதி இழப்பீடுகள் குறித்த விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | முழுமையான அறிக்கை யினை சமர்ப்பிப்பதற்கு 7 நாட்களிற்கு மேல் கால தாமதம் ஏற்படின் ஆரம்ப அறிக்கையினை உடனடி யாக அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் விசார ணையின் பின்னர், இழப்பு ஏற்பட்ட தினத்திலிருந்து 3 மாதத்தினுள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(2) இன் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பான பொலிஸ் முறைப்பா டுகள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறாததுடன் பொறுப்புக்களை சாட்டுவதற்காக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகளிற்கான நல்லாளுகை வழிகாட்டல் களின் படி பணியகத்தின் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக் கவில்லை. | 2019 ஆம் ஆண்டுக் கான வருடாந்த அறிக்கை 2022 ஆகஸ்ட் இல் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். 2020 ஆம் ஆண்டுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | வருடாந்த அறிக்கையை உடனடியாக பாராளுமன் றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 தந்துரோபாயத் திட்டத்தை தயாரித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களு க்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டுதலின் 2.3 ஆம் பந்தியின் படி, தெளிவாக வரையறுக்கப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகள் (KPIs) காணப்படுவதை உறுதிசெய்து, திட்டம் அமுல்படுத்தப்படு வதைத் தொடர்ச்சியாக மீளாய்வுசெய்து, நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படு வதற்குத் தேவையான இடங்களில் திருத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக, 2021 - 2025 மற்றும் 2022 - 2026 காலகட்டத்திற்கான ஒரு தந்துரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 - 2025 காலகட்ட த்திற்கான ஒரு தந்து ரோபாயத் திட்டம் தயாரி க்கப்பட்டு சபை அங்கீகா ரத்திற்காக முன்வைக்கப் பட்டுள்ளது. | அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களு க்கான கூட்டிணைந்த ஆளுகை க்கான வழிகாட்டுதல்களில் வழங்கப்பட்டுள்ள பணிப்பு ரைகளின் படி தந்து ரோபாயத் திட்டம் தயாரிக் கப்பட்டு சமர்ப்பிக்கப்படு தல் வேண்டும். |

### 4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கை என்பவற்றின் பிரகாரம், பணியகத்தின் 05 பிரிவு | பிரதானமாக நாட்டில் நிலவுகின்ற கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தை முழுமையாக செயல் படுத்த முடியவில்லை. | நிச்சயிக்கப்பட்ட இலக்கு களை பயனுள்ள விதத் தில் அடைந்துகொள்வத ற்காக நெகிழ்வுத் தன் மையான அடிப்படையில் |

களிற்குரிய ரூபா 29,750,000 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 26 இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் எவ்வித செயன்முன்னேற்றமும் அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை பணியகத்தின் ஒட்டுமொத்த செயலாற் றலிற்கு பாதகமாக தாக்கமளித்திரு ந்தது.

செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.